**செயற்பொறியாளர், நீ.வ.து., திட்டம் மற்றும் வடிவமைப்புக் கோட்டம்,**
**மதுரை அவர்களின் செயல்முறை ஆணை**

முன்னிலை : பொறி.மு.காவேரி கணேசன், பி.இ., எம்.பி.ஏ.,
செயற்பொறியாளர், நீ.வ.து.,

<u>செயல்முறை கடித எண்: நிஉ 2/491/2024/ நபர்வரு/ நாள். 21.06.2024</u>

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – நீர்வளத்துறை – திரு.ச.கார்த்திக், த/பெ.சு.சங்கர் (லேட்), ஆட்சி அலுவலர் – கருணை அடிப்படையிலான இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்.எஸ்3(2)/ 44143/2021/ நாள்:25.07.2022.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.இ2/740/2022/ நாள்.17.08.2022.
3. அரசாணை (நிலை) எண்.33/ தொழிலாளர் மற்றும் மேம்பாடு துறை/Q1 /நாள்.08.03.2023.
4. அரசு கடித எண்.1321/பி1/2024–1/ நாள்.02.04.2024.
5. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்.எஸ்3(2)/ 21951/2024/ நாள்:29.04.2024.
6. கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., திட்ட உருவாக்க வட்டம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்.பஎ2/1583 (1838)/ 2023/ நாள்.11.06.2024.

-------

இத்துறையைச் சார்ந்த திருநெல்வேலி, தாமிரபரணி வடிநில வட்ட அலுவலகத்தில் ஆட்சி அலுவலராக பணியிலிருந்த திரு.S.சங்கர் அவர்கள் 16.07.2020 அன்று காலமானார். தனியரது மனைவி திருமதி. S.முத்துகிருஷ்ணவேணி அவர்களது விண்ணப்பத்தின் பேரில், இவர்களது மகன் திரு. S.கார்த்திக் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நீர்வளத்துறையில் பார்வை 1 ல் காணும் ஆணையின் வாயிலாக, முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களால்

த.பி.பா.

கருணை அடிப்படையில் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு, இக்கோட்டத்தின் கீழ் இயங்கும் திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம், பாளையங்கோட்டை அலுவலகத்தில் 18.08.2022 பிற்பகல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

பார்வை எண்.3 முதல் பார்வை எண்.6 வரையில் காணும் அரசாணை மற்றும் கடிதங்களில் கூறியுள்ள தெளிவுரையில், கருணை அடிப்படையில் பணிநியமன விதி Tamilnadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023-ன் படி, பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணிவரன்முறை குறித்த கருத்துருவில், விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் பணிநியமன அலுவலர், பணியினை விதி 16-ன் படி வரையறைக்குட்பட்டு நியமன அலுவலரே வரன்முறை செய்து கொள்ளுமாறும், விதி 17-ன் படி, கல்வித் தகுதி தவிர இதர விதித்தளர்வு தேவைப்படும் பணியாளர்களின் பணிவரன்முறை தொடர்பான கருத்துரு மட்டும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் தெளிவுரையின்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீர்வளத்துறையில், கருணை அடிப்படையிலான இளநிலை உதவியாளர் பதவியில் 18.08.2022 பிற்பகல் பணிநியமனம் செய்யப்பட்ட, (இத்துறையில் ஆட்சி அலுவலராக பணிபுரியும் பொழுது 16.07.2020 அன்று காலமான திரு. S.சங்கர் என்பவரது மகன்) திரு. S.கார்த்திக், தனியரது தந்தை காலஞ்சென்ற சமயம், தனியர்க்கு வயது 19 ஆண்டுகள். பணிநியமனம் செய்யும் பொழுது இவரின் வயது 21 ஆண்டுகள் ஆகும். (திரு. S.கார்த்திக், பிறந்த தேதி.01.07.2001). தனியர், 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்.

இவர்க்கு பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கும் நகழ்வில், விதித்தளர்வு தேவைப்படாத காரணத்தினாலும், இளநிலை உதவியாளர் பதவிக்குரிய பணிநியமன அலுவலர், அரசாணை எண் : 2151/PWD/Dt:27.12.1988 ன்படி, செயற்பொறியாளர் ஆவார் என்ற காரணத்தினாலும், தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற அப்பதவிக்குரிய சிறப்பு விதிகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கல்வி மற்றும் வயது வரம்பினை நிறைவு செய்துள்ளதன் அடிப்படையில், திரு. S.கார்த்திக், இளநிலை உதவியாளர் பதவியில் பணிமேற்கொண்ட நாளான 18.08.2022 பிற்பகல் அன்று, தனியரது பணியினை வரன்முறை செய்தும், மூன்றாண்டு தொடர்பணிக் காலத்தில் இரண்டு ஆண்டு தகுதிகாண் பருவத்தினை தொடங்கியும் ஆணை வழங்கப்படுகிறது. மேலும், இதன் காரணமாக அவர்க்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு வழங்கிடவும் மற்றும் ஊதிய நிலுவை தொகையினை கணக்கிட்டு வழங்கிடவும் ஆணையிடப்படுகிறது.

பெறுநர்
திரு.ச.கார்த்திக்,
இளநிலை உதவியாளர்,
திட்டம் மற்றும் வடிவமைப்பு
உபகோட்டம், பாளையங்கோட்டை.

ஓம்............
செயற்பொறியாளர், நீ.வ.து.,
திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம்,
மதுரை.

(வழி) உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம், பாளையங்கோட்டை.

நகல் : தலைமைப்பொறியாளர், திட்ட உருவாக்கம், நீவது., சென்னை அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் : கண்காணிப்புப்பொறியாளர், நீவது., திட்ட உருவாக்க வட்டம், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் : சம்பளக் கணக்கு அலுவலகம், மதுரை.

பட்டியலுக்கு,

பணிப்பதிவேட்டிற்கு,

உபரி நகல் – 1.

21.06.24

செயற்பொறியாளர், நீ.வ.து.,
திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம்,
மதுரை

21/6/24